கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

மூன்றாம் வருட முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு

2013 / 2014 (ஜனவரி - 2018)

## HY/S 3123 History of South Asia AD 1707 - 1970

## HY/S 3123 தென்னாசிய வரலாறு கி.பி 1707 - 1970

நேரம் : 03 மணித்தியாலங்கள்

இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டது. முதலாம் பகுதியிலிருந்து இரண்டு வினாக்களையும் இரண்டாம் பகுதியிலிருந்து மூன்று வினாக்களையும் தெரிவு செய்து மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையெழுதுக.

எழுத்துக்கள் தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படலாம்.

---

### பகுதி – I

01. "இந்தியாவில் பிரித்தானியரின் காலனித்துவ ஆதிபத்தியம் பல போராட்ட வடிவங்களினூடாகவே நிலைபெற்றது" இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை மேல்வரும் தலைப்புக்களில் ஆராய்க.
   (அ) முதலாவது கர்நாடகப் போர் (10 புள்ளிகள்)
   (ஆ) இரண்டாவது கர்நாடகப் போர் (10 புள்ளிகள்)

02. இந்திய வரலாற்றில் ஆங்கில ஆளுநர் றோபேட் கிளைவ் பெறுகின்ற முக்கியத்துவத்தினை மேல்வரும் தலைப்புக்களினூடாக விபரிக்குக.
   (அ) நிர்வாக நடவடிக்கைகள் (10 புள்ளிகள்)
   (ஆ) வெளிநாட்டுக் கொள்கை (10 புள்ளிகள்)

03. "இந்தியாவின் விடுதலையை நோக்காகக் கொண்டு உருவாக்கம் பெற்ற அமைப்பே இந்திய தேசிய காங்கிரஸ் இயக்கமாகும்" இக்கூற்றின் அடிப்படையில் மேல்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.
   (அ) இந்திய தேசிய காங்கிரசின் உருவாக்கமும் அதன் நோக்கங்களும் (10 புள்ளிகள்)
   (ஆ) மிதவாதிகளின் போக்கு (10 புள்ளிகள்)

### பகுதி – II

04. சிப்பாய்களின் அதிருப்தியின் வெளிப்பாடே 1857/58 ஆம் ஆண்டு இடம்பெற்ற சிப்பாய்க் கலகமாகும். இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை சமகால அரசியல், பொருளாதாரம், சமூகக் காரணிகளினூடாக மதிப்பீடு செய்க. (20 புள்ளிகள்)

05. 19 ஆம் நூற்றாண்டில் இந்தியாவில் உருவாக்கம் பெற்ற சமூக, சமய நிறுவனங்களினூடாக இந்திய சமூகத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் குறித்து ஒரு கட்டுரை எழுதுக. (20 புள்ளிகள்)

06. "செய் அல்லது செத்துமடி (Do or Die) என்ற மகாத்மாகாந்தியின் வாசகமே இந்திய சுதந்திரப் போராளிகளுக்கு தாரக மந்திரமாக அமைந்திருந்தது." இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை மகாத்மா காந்தியின் இறுதிப் போராட்ட வடிவங்களினூடாக ஆராய்க. (20 புள்ளிகள்)

07. இந்திய – பாக்கிஸ்தான் பிரிவினைக்கு வழிவகுத்த காரணிகளைக் குறிப்பிட்டு அதன் விளைவுகளைப் பரிசீலனை செய்க.